பல்வேறு மாவட்ட அரசு மருத்துவமனைகளில் தட்டுப்பாடு!

# குழந்தைகளின் உயிர்காக்கும் மருந்து கிடைப்பதை உறுதி செய்க!

## கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. வலியுறுத்தல்!



சென்னை, செப். 25-

பல்வேறு மாவட்ட அரசு மருத்துவமனைகளில் பச்சிளம் குழந்தைகளின் உயிர்காக்கும் மருந்துகள் கிடைப்பதில் தட்டுப்பாடு நிலவுவதாக செய்திகள் வருகின்றன. அரசு உரிய நடவடிக்கை எடுத்து மருந்து கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. வலியுறுள்ளார்.

இது குறித்து கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. ட்விட்டரில் விடுத்துள்ள பதிவு வருமாறு:

சென்னை, தேனி, தருமபுரி, திருப்பூர், கடலூர், திருவண்ணாமலை, வேலூர், கரூர் உள்ளிட்ட தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் பச்சிளம் குழந்தைகளின் உயிர்காக்கும் மருந்துகள் கிடைப்பதில் தட்டுப்பாடு நிலவுவதாகச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

பிறந்த பச்சிளம் குழந்தைகளுக்கு மிகவும் அடிப்படைத் தேவையான உயிர்காக்கும் மருந்துகளை வழங்க முடியாமல் என்ன செய்துக்கொண்டிருக்கிறது சுகாதாரத்துறை?

இளம்பிஞ்சுகளின் விரலில் மோதிரம் மாட்டி விளம்பரம் தேடத் துடிக்கும் அக்கறையைக் குழந்தைகளின் உயிர்களைக் காப்பதில் கொஞ்சமாவது காட்ட வேண்டாமா?

குழந்தைகளுக்கான மருந்துகள் தட்டுப்பாடின்றிக் கிடைப்பதை தமிழ்நாடு அரசு உடனே உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தெருக்களில் சாதிப்பெயர் நீக்கம்!

# முத்தமிழறிஞர் கலைஞரின் புகழ் மகுடத்தில் மேலும் ஒரு வைரக்கல்!

தந்தை பெரியாரின் நெஞ்சில் தைத்திருந்த முள்ளான "அனை த்துச் சாதியினரும் அர்ச்சகராக முடி யாத நிலை" கருவறை தீண்டா மையை கலைந்து, 1970-ம் ஆண்டு சட்ட மன்றத்தில் அறநிலையத் துறை சட்டம் 55, 56 மற்றும் 116-ல் திருத்தம் கொண்டு வந்து அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என சட்டம் இயற்றி அதற்கு மருந்திட்டவர் மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் .

அதனை நடைமுறைப்படுத்தி அனைத்து சாதியினரையும் அர்ச்சாராக்கி அவர்களுக்கு அர்ச்சகர் பணி ஆணையையும் தமிழ் நாட்டின் முதல்வராய் நின்று கொடுத்து, பெரியாரின் நெஞ்சில் தைத்த முள்ளின் ரணங்களையும் ஆற்றியவர் திராவிட நாயகர் தளபதி மு. க. ஸ்டாலின் அவர்கள்,

இவைகளையெல்லாம் தாண்டி இன்று லட்சோப லட்சம் மக்களின் நெஞ்சில் தைத்திருந்த முள்ளை அகற்ற, திராவிட நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் குடியிருப்புகள், தெருக்கள், சாலைகள், நீர்நிலைகள், கிராமங்களின் பெயர்களில் உள்ள ஜாதி பெயர்களை நீக்க வேண்டும். தெருக்கள், சாலைகளுக்கு தலை வர்கள், கவிஞர்கள், மலர்களின் பெயர்களை சூட்ட வேண்டும் என தமிழக அரசு, 2025 அக்., 6ல் அரசாணை பிறப்பித்தார் .

இதன்மூலம் தெருக்களின் பெயரில் உள்ள சாதி குறியீடு பெயர்களை அகற்றி சட்ட முன்வடிவு கொண்டுவந்து இன்று மக்களின் நெஞ்சில் தைத்த முள்ளினை திராவிட நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் அகற்றும் முயற்சியை மேற்கொண்டு இருக்கிறார்.

இந்த சட்ட முன்வடிவுக்கு எதிராக இடைக்கால தடை கேட்டு மதுரை உயர்நீதி மன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கில், திராவிட நாயகர் முத்து வேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் இந்த முயற்சிக்கு மகுடம் சூட்டுவதுபோல நீதி யராசர்கள் சி.வி. கார்த்திகேயன், ஆர். சக்திவேல் ஆகியோரின் அமர்வு வரலாற்று சிறப்புமிக்க கருத்தினை தந்திருக்கிறது .

**“தெருக்கள், சாலைகள் உள்ளிட்ட வற்றிலுள்ள ஜாதி பெயர்களை நீக்குமாறு சம்பந்தப்பட்ட மக்களே தானாக முன்வந்து அரசிடம் கோரிக்கை வைத்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யாத தால், மக்கள் மனதில் மாற்றங்களை உருவாக்கும் வகையில், ஜாதி பெயர்களை நீக்க [முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தலைமை யிலான ]தமிழக அரசு அரசாணை பிறப்பித்தது.**

**ஒரு மாவட்டத்தில், ஹரிஜன் காலனியாக இருந்ததை திரு வள்ளுவர் காலனி என பெயர் மாற்றம் செய்துள்ளனர். இது அப்பகுதியில் வசிப்போருக்கு பெருமையை தேடித்தரும். பல இடங்களில் கக்கன் பெயர் சூட்டப்பட்டுள்ளது. பொது வாழ்வில் நேர்மை, எளிமையை பின்பற்றி யதற்காக கக்கன் போற்றப்படு கிறார். மாற்று பெயர்கள் அனைத்தும், மக்க ளின் நன்மதிப்பை பெற்ற வர்களின் பெயர்களே. நடை முறையிலுள்ள ஜாதி பெயர்கள் பிறரை அவமதிக்கும் வகையில் உள்ளன. அவற்றிற்கு பெயர் மாற்றம் செய்யும் இந்நட வடிக்கையை பல ஆண்டுகளுக்கு முன் மேற் கொண்டிருக்க வேண்டும். அரசு, காலம் தாழ்த்தியிருக்கக் கூடாது.**

**ஜாதி பெயர்களை நீக்குவதால், குழப்பம் ஏற்படும் என கூறப்படுவது ஏற்கத்தக்கதல்ல. மனதளவில் ஜாதியை அகற்றியவர்களின் மனதில், குழப்பம் இருக்காது. இடைக்காலத் தடை நீக்கப்படுகிறது. மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.**

**இவ்வாறு அந்த அறிக்கை கூறுகிறது**

பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரின் நெஞ்சில் தைத்த முள்ளை அகற்றி திராவிட இயக்க வரலாற்றில் புதிய வெற்றித் தடம் பதித்த மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் புகழ் மகுடத்தில் மேலும் ஒரு வைரக்கல்லாய், திராவிட நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் லட்சோப லட்ச மக்களின் இதயத்தில் தைத்திருந்த இந்த சாதி அடையாளம் எனும் முள்ளினை அகற்ற எடுத்தஇந்த முயற்சி அமைகிறது.

தொலைநோக்கு பார்வையோடு எடுக்கப் பட்டிருக்கும் இந்த முயற்சி எதிர்காலத்தில் சாதிய அடையாளம் எனும் அரக்கன் அழியும்என்பதற்கான ஒரு முன்னோட்டமாக அமையும் என்பதில் ஐயமில்லை.



**ஏ,கே.எஸ்.விஜயன்**
கழக விவசாய அணிச் செயலாளர்


தந்தை பெரியாரின் 148வது பிறந்தநாள் விழா:

# அமெரிக்க டல்லாஸ் நகரில் கோலாகல கொண்டாட்டம்!

டல்லாஸ், டெக்சாஸ், செப்.25-

தந்தை பெரியாரின் 148 வது பிறந்தநாள் விழா அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணம் டல்லாஸ் நகரில் மிகச் சிறப்பாகவும் கோலா கலமாகவும் கொண்டாடப் பட்டது.

பெரியார் இன்டர்நேஷனல் அமைப்பு, NRTIA மற்றும் தி.மு.க. வெளிநாடு வாழ் இந்தியர் அணி (DMK NRI South Wing) அமைப்பின் ஒருங்கிணைப்பாளர்கள் இணைந்து இந்த விழாவை முன்னின்று ஏற்பாடு செய்து பங்கேற்றனர். சமூக நீதி மற்றும் பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்பும் வகையில் நடத்தப்பட்ட இந்நிகழ்ச்சிக்கு உள்ளூர் மக்களிடையே பெரும் வரவேற்பு கிடைத்தது.



தந்தை பெரியாரின் 148–வது பிறந்தநாள் விழா அமெரிக்க டல்லாஸ் நகரில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இதில் தி.மு.க. வெளிநாடு வாழ் இந்தியர்கள் பங்கேற்றனர்.

விழாவில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகள்:

பெரியார் நினைவு 5k ஓட்டம்: சமூக நீதி விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நடைபெற்ற இந்த ஓட்டத்தில் ஏராளமானோர் ஆர்வமுடன் கலந்து கொண்டு ஓடினர்.

இளம் தலைமுறைக்கான பேச்சுப்போட்டி: சிறுவர் மற்றும் சிறுமியர்களுக்காக “AI யுகத்தில் பெரியாரின் பங்களிப்பு” என்ற தலைப்பில் நடைபெற்ற பேச்சுப்போட்டி அனைவரையும் கவர்ந்தது.

சமூக நீதி நாள் உறுதிமொழி: விழாவில் கலந்து கொண்ட அனைவரும் சமத்துவம் மற்றும் சமூக நீதியைக் காப்போம் எனத் தங்களின் உறுதிமொழியை ஏற்றுக்கொண்டனர்.

**சிறப்பு கருத்தரங்குகள்:**

பெண்களின் காவலர் பெரியார் பெரியாரும் சமூக நீதியும் Social Scientist பெரியார்

வீடுகளில் பெரியாரிசம் போன்ற பல்வேறு ஆழமான தலைப்புகளில் சிந்தனையைத் தூண்டும் உரையாடல்களும் விவாதங்களும் நடைபெற்றன.

பெரியாரின் சிந்தனைகளை உலகளாவிய தமிழர்களிடம் கொண்டு சேர்க்கும் விதமாக அமைந்த இந்த டல்லாஸ் கொண்டாட்டம், அமெரிக்காவில் வாழும் தமிழர்கள் மத்தியில் பெரியார் கொள்கைகளின் தாக்கத்தை மீண்டும் ஒருமுறை ஆழமாகப் பதித்துள்ளது.



கடலூர் மாநகராட்சி ஆணையாளர் கிஷன் குமார், மேயர் மற்றும் மாநகர மன்ற உறுப்பினர்களை அவமரியாதை செய்ததைக் கண்டித்து, மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் விவேகானந்தா சுக்லா அவர்களிடம், மாநகர மேயர் சுந்தரி ராஜா மற்றும் மாநகர மன்ற உறுப்பினர்கள், மாநகர கழக செயலாளர் கே .எஸ். ராஜா மற்றும் கழக உறுப்பினர்கள் புகார் மனு அளித்தனர்,

# சூரியப் புரட்சி!



அதிகாரத்தை
பொருளாதாரத்தை
தூண்டில் புழுவாக்கி

அப்பட்டமான
“ஷோபா” பேரத்தை
வெளிப்படையாக நடத்தி

தாங்கள்
அபகரித்துக் கொண்டு
வந்த ஆட்களை
ராஜினாமா செய்ய
வைத்து

அப்படி
ராஜினாமா
செய்த
அதே பதவிகளுக்கு

ராஜினாமா செய்த
அதே ஆட்களை
தங்கள் கட்சியின்
வேட்பாளர்களாக
நிறுத்தி

பொதுத் தேர்தல்
நடந்து முடிந்த நான்கே
மாதத்தில்

அவசியமற்ற ஒரு
இடைத்தேர்தலுக்கான
கட்டாயத்தை
ஒரு கட்சி
உருவாக்குவதும்...
திருடி வந்த
ஆட்களை கொண்டே

வெற்றியை
திருடுவோம் என்று அது
கொக்கரிப்பதும்

அதனை
கைகட்டி
வாய்பொத்தி நின்று

ஆளுநரும் அரசியல்
அமைப்புகளும் குறிப்பாக
இந்திய தேர்தல் “கேணையமும்”
வேடிக்கை பார்க்கிறது
என்றால்

இந்த சாக்கடை
போக்குக்கு

சவுக்கடி தரவேண்டிய
கடமை

திணிக்கப்பட்டுள்ள
தேர்தலில்

இரண்டாம்
முறையாக

தீர்ப்பெழுதப்
போகும்

மானரோசமுள்ள
மதுராந்தகம்
தாராபுரம்
மக்களையே
சாரும்...

ஆம்...

ஒருவிரல் புரட்சியில்

ஐ விரல்
சூரியன்
உதிக்கட்டும்...

அறியாமை
இருளை

அக்டோபர்
திங்கள்

அடியோடு
பொசுக்கட்டும்...

**என்னநாஞ் சொல்றது**



**மருது அழகுராஜ்**
கழக செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்



தினத்தந்தி அதிபர் மறைந்த சிவந்தி ஆதித்தன் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தூத்துக்குடி வடக்கு மாவட்ட கழக செயலாளர் – முன்னாள் அமைச்சர் பி.கீதா ஜீவன் அறிவுறுத்தலின் படி மாவட்ட கழக அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டு இருந்த அவரது படத்துக்கு மாவட்ட அவைத்தலைவர் செல்வராஜ், மாவட்ட பொருளாளர் சுசீ ரவீந்திரன், மாவட்ட துணை செயலாளர்கள் ராஜ்மோகன் செல்வின், பிரமிளா, மாவட்ட பிரதிநிதிகள், வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக நிர்வாகிகளால் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.